

## சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் பசலி 1432.க்கு ஸ்டால் அமைத்து படங்கள் விற்பனை உரிமம் – இ டெண்டர்

## பொது ஏலம்/ டெண்டர் விளம்பர தொடர் அறிவிப்பு

## ந.க.எண். 12994 /1431 /சி4–4 நாள். 11.07.2022

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் பசலி **1432**ன் பலவகை இனங்களுக்கான பொது ஏலம்/டெண்டர் **1)** முடி சேகரித்துக் கொள்ளும் உரிமம், **2)** ஆடு கோழி சேகரித்துக் கொள்ளும் உரிமம், **3)** உப்பு, நெட்டில், தொட்டில் வகையறா சேகரித்துக் கொள்ளும் உரிமம், **4)** ஸ்டால் அமைத்து படங்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம் மற்றும் **5)** தேங்காய், பழம் அர்ச்சனை தட்டு விற்பனை செய்யும் உரிமம் ஆகிய ஐந்து உரிம இனங்களுக்கு **29.07.2022** அன்று பிற்பகல் அருள்மிகு மாரியம்மன் மண்டபத்தின் முதல் தளத்தில் ஏலம்/டெண்டர் நடத்த **13.07.2022** அன்று வெளியான தினதந்தி மற்றும் இந்து ஆங்கில நாளிதழில் விளம்பரம் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பான விபரங்கள் https://samayapurammariamman.hrce.tn.gov.in மற்றும் http://www.tenders.tn.gov.in என்ற இணையதளங்களில் வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது வரிசை எண் **1** மற்றும் **4**ல் உள்ள இனங்களை மட்டும் அதே **29.07.2022** அன்று பிற்பகல் **01.30** மணிக்கு அதே நிபந்தனைகளின் படி E-Tenderல் விட **MSTC** என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, திருக்கோயில் மூலம் நடத்தும் வகையில் வெளியிடப்பட்டிருந்த டெண்டர் படிவம் நீக்கப்பட்டுள்ளது. இந்த இனங்களுக்கு **MSTC** மூலம் E- Tenderல் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் https://www.mstcecommerce.com என்ற இணையதள முகவரியில் தங்கள் நிறுவனத்தை பதிவு செய்து கொண்டு, E- Tender ல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பொருள் தொடர்பாக ஏற்படக்கூடிய சந்தேகங்களை MSTC அலுவலக எண்களான **9499054101, 9499054102, 9499054103, 9499054104** மற்றும் **9444976359** தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வரிசை எண் **2, 3** மற்றும் **5** யில் உள்ள இனங்களான பொது ஏலம் / டெண்டர் திறப்பு **29.07.2022** அன்று பிற்பகல் **01.30** மணிக்கு இத்திருக்கோயிலுக்கு சொந்தமான மாரியம்மன் மண்டபத்தில் உள்ள முதல் தளத்தில், விளம்பரத்தில் வெளியிடப்பட்டவாறு நடைபெறும். இவ்வினங்களுக்கான நிபந்தனைகள் மற்றும் டெண்டர் படிவத்தை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம் அல்லது நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

MSTC மூலம் இ டெண்டர் நடத்தப்படுவதால் கீழ்காணும் படம் விற்பனை ஸ்டால் டெண்டர் நிபந்தனைகளில் டெண்டர் நடைபெறும் இடம் மற்றும் இதர நிபந்தனைகள் தொடர்பான டெண்டர் படிவம் விலை, வரிசை எண். **3, 6, 7, 8, 12, 13, 52** ஆகிய சிகப்பு நிறமிட்ட நிபந்தனைகள் பொருந்தாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மற்ற நிபந்தனைகள் இ–டெண்டருக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்படுகிறது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் படம் ஸ்டால் அமைத்து படங்கள் விற்பனை செய்யும் உரிமத்திற்கு பசலி 1432–க்கு ( 03.08.2022 முதல் 30.06.2023 முடிய ) உள்ள காலங்களுக்கு, பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட விபரப்படி வைப்புத் தொகை செலுத்தி கலந்துக் கொள்ளலாம்.**

| | | |
|---|---|---|
| 1. | டெண்டர் படிவம் விலை | ரூ.500/– (திரும்பப் பெறத்தக்கதல்ல) **பதிவிறக்கம் செய்பவர்கள் ரூ.500/–க்கு """ இணை ஆணையர்/ செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி"" என்ற பெயரிலான வரைவோலை இணைக்க வேண்டும்.** |
| 2 | ஏலம்/ டெண்டர் டெபாசிட் | ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |
| 3 | டெண்டர் படிவம் வழங்கப்படும் நாள் | 12.07.2022 முதல் 28.07.2022 மாலை 5.00 மணி வரை (அலுவலக வேலை நாட்களில் |

| | | |
|---|---|---|
| | | மட்டும் ) |
| 4 | டெண்டர் போட கடைசி நாள் | 29.07.2022 பிற்பகல் 1.00 மணி |
| 5 | ஏலம் நடைபெறும் நாள் | 29.07.2022 பிற்பகல் 1.30 மணி |
| 6 | டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் | 29.07.2022 அன்று ஒவ்வொரு இனத்திற்கும் ஏலக்கேள்விகள் முடிந்த பின்னர் |
| 7 | ஏலம்/ டெண்டர் நடைபெறும் இடம் | சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள முதல் தளம் |

## நிபந்தனைகள்

1. திருக்கோயிலில் ஸ்டால் அமைத்து படங்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் /டெண்டரில் இந்து மதத்தை சார்ந்தவர்கள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

2. திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள், இளவர்கள், நொடிப்பு நிலை எய்தியவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக டிகிரி செய்யப்பட்டவர்கள், திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்கள், வழக்கு தொடர்ந்தவர்கள், குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் மேற்குறித்தவர்களின் பினாமிகள் மற்றும் அவர்களின் தொழில் கூட்டாளிகள் பொது ஏலம் / டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. டெண்டர் படிவத்தை 12.07.2022 முதல் 28.07.2022 மாலை 5.00 மணி வரை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக பணி நேரத்தில் நேரில் ரூ.500/- ரொக்கமாக செலுத்தி டெண்டர் படிவத்தை பெற்றுக்கொள்ளளாம்.
   அல்லது https://samayapurammariamman.hrce.tn.gov.in, http://tenders.tn.gov.in என்ற திருக்கோயில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பதிவிறக்கம் செய்யப்பட்ட டெண்டர் படிவத்திற்கான கட்டணம் ரூ. 500/- க்கான வரைவோலையினை இணைத்து டெண்டர் சமர்ப்பிக்க வேண்டும். டெண்டர் படிவத்திற்கு செலுத்திய தொகை திருப்பி வழங்கப்பட மாட்டாது.

4. சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 1432-ம் பசலியில் ( 03.08.2022 முதல் 30.06.2023 முடிய ) திருக்கோயிலில் ஸ்டால் அமைத்து படங்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமத்திற்கு ஏலம்/ டெண்டரில் கலந்து கொள்பவர்கள் ரூ.5,00,000/-க்கான (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) டெபாசிட் தொகையினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சமயபுரம் கிளையில் மாற்றத்தக்க வகையில், """" **Joint Commissioner/ Executive Officer, Arulmigu Mariamman Temple, Samayapuram"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட வரைவோலையினை டெண்டருடன் இணைத்துக் கொடுக்க வேண்டும். மேற்படி இனத்திற்கான பொது ஏலத்தில் கலந்து கொள்ளும் போது வரைவோலையின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

5. பொது ஏலம் / டெண்டரில் கலந்து கொள்பவர்கள், அ) ஆதார் கார்டு, ஆ) முகவரி சான்று, இ) வருமான வரிக்கான Pan card, ஈ) சிறு தொழில் முனைவோருக்கான சான்று உ) நடப்பு காலத்தில் வணிக வரித் துறையில் பதிவுசெய்ததற்கான சான்று ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை சமர்ப்பித்து பொது ஏலம்/டெண்டரில் கலந்து கொள்ள வேண்டும்.

   பொது ஏலம் / டெண்டரில் கலந்து கொள்பவர்கள், அ) கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக (நிதியாண்டு 2017- 2018 முதல் 2021 - 2022 முடிய) அரசுக்கு வருமான வரி செலுத்தியத்ற்கான வருமான வரித்துறையின் சான்று, ஆ) கடந்த ஓராண்டிற்கு (ஏப்ரல் 2021 முதல் ஜுன் 2022 முடிய) மாதந்தோறும் GST தாக்கல் செய்ததற்கான அரசு ஆவணங்களை பொது ஏலம்/ டெண்டர் நடைபெறும் இடத்தில் தாக்கல் செய்ய வேண்டும். GST தாக்கல் செலுத்துவதிலிருந்து விலக்கு பெற்ற இனங்களுக்கு அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்ய வேண்டும்.

6. டெண்டர் கொடுப்பவர்கள் 1) பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவம், 2) டெபாசிட்டிற்கான அசல் வங்கி வரைவோலை ஆகியவற்றை மட்டுமே டெண்டர் கவரின் உள்ளே வைத்து சீலிட்டு டெண்டர் பெட்டியில் 29.7.2022 பிற்பகல் 1.00 மணிக்குள் போட வேண்டும்.

டெண்டர் மதிப்பு தொகையை அடித்தல் திருத்தல் இன்றி எண்ணாலும், எழுத்தாலும் தெளிவாக எழுதி இருக்க வேண்டும்.

7. ஏல டெபாசிட் செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள், வரிசை எண். 4 ல் காணும் விபரப்படி ரூ. 5.00 இலட்சத்திற்கான அசல் வங்கி வரைவோலையை சமர்ப்பிப்பதுடன், வரிசை எண். 5 மற்றும் 6 ல் காணும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணங்கள் அறநிலையத்துறை அதிகாரிகளால் சரி பார்த்த பிறகு, ஏல பதிவேட்டில் ஏல டெபாசிட் தாரரின் பெயர் மற்றும் முகவரியை பதிந்து, பின்னர் பொது ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

8. டெண்டர் சமர்ப்பித்தவர்கள், அ) டெண்டருடன் ஏற்கனவே சமர்ப்பித்த ரூ. 5.00 இலட்சத்திற்கான வங்கி வரைவோலையின் நகலினை, ஆ) வரிசை எண். 5 மற்றும் 6 ல் காணும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களையும், இ) இணையதளத்தில் டெண்டர் படிவத்தை பதிவிறக்கம் செய்தவர்கள் ரூ. 500/–க்கான வங்கி வரைவோலையும் – சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணங்கள் அறநிலையத்துறை அதிகாரிகளால் சரி பார்த்த பிறகு, ஏல பதிவேட்டில் டெண்டர் டெபாசிட் தாரரின் பெயர் மற்றும் முகவரியை பதிந்து, பின்னர் பொது ஏலம்/டெண்டரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். டெண்டர் டெபாசிட் செலுத்தியவர்கள் பொது ஏலத்தில் பங்கு பெற்று ஏலக் கேள்வியும் கேட்கலாம்.

9. மேற்காணும் விபரப்படி, 1) ஆதார் கார்டு, 2) முகவரி சான்று, 3) வருமான வரிக்கான Pan card சான்று, 4) சிறு தொழில் முனைவோருக்கான சான்று (MSME), 5) நடப்பு காலத்தில் வணிக துறையில் பதிவுசெய்ததற்கான சான்று, 6) கடந்த ஐந்து நிதியாண்டுகளுக்கு வருமான வரி செலுத்தியதற்கான அரசு ஆவணம், 7) கடந்த ஓராண்டிற்கு GST செலுத்தியதற்கான அரசு ஆவணம், ஆகியவற்றின் சான்றிட்ட ஆவணங்களை, டெபாசிட்டிற்கான வரைவோலை நகலினை சமர்ப்பிக்காத எந்த ஒரு நபரையும் பொது ஏலம்/டெண்டரில் கலந்து கொள்ள கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது.

10. டெண்டரில் கலந்து கொள்பவர் தமிழகத்தின் முக்கியத் திருக்கோயில்களில் சுவாமி திருவுருவப் படங்கள் விற்பனை செய்வதில் குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழைத் தாக்கல் செய்ய வேண்டும்.

11. ஏலம் / டெண்டருக்கு டெபாசிட் செலுத்தும் நபர்கள் உரிமத்திற்கான நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் அனைத்தையும் முழுமையாக படித்து விபரம் அறிந்து கொண்ட பின்னரே, டெபாசிட் செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டதாக கருதப்படுவார்கள்.

12. ஒப்பந்த புள்ளி முதலில் பெறப்பட்டு பின் பொது ஏலம் நடத்தப்படும். பொது ஏலக்கேள்வி முடிவடைந்த பின்னர், உடனடியாக இந்த இனத்திற்கு வரப்பெற்ற டெண்டர் கவர்கள் திறக்கப்பட்டு, ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக்கேள்வித் தொகை மற்றும் வரப்பெற்ற டெண்டர்களில் உயர்ந்த டெண்டர் மதிப்புத் தொகை – இவைகளில் எது உயர்ந்த தொகையோ, அந்த உயர்ந்த தொகைக்கான ஏலம் / டெண்டர் ஆணையரின் அங்கீகாரம் / ரத்தாணைக்கு உட்பட்டு உயர்ந்த தொகை பதிவு செய்யப்படும்.

13. பொது ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏல கேள்வி தொகை/ டெண்டர் மதிப்பு தொகை முழுவதையும் எவ்வித நிலுவையும் இன்றி ஏலம்/டெண்டர்தாரர் ரொக்கமாகவோ, வரைவோலையாகவோ உடனடியாக செலுத்திவிட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் காசோலை ஏற்கப்பட மாட்டாது.

14. உயர்ந்த பட்ச ஏல/ டெண்டர் தாரர் பெயரில் திருக்கோயிலுக்கு எடுக்கப்பட்ட வங்கி வரைவோலையை மட்டுமே திருக்கோயிலுக்கு உரிமத் தொகைக்காக வரவு வைக்கப்படும்.

    இந்த பொது ஏலம்/ டெண்டரில் செலுத்தப்பட்டுள்ள இதர நபர்களின் டெபாசிட்டிற்கான வங்கி வரைவோலைகளை, உயர்ந்தபட்ச ஏல/ டெண்டர் தாரரின் உயர்ந்த கேள்வி தொகைக்கு எக்காரணத்தை முன்னிட்டும் வரவு வைக்க இயலாது.

15. உயர்ந்த ஏலம் /டெண்டர் தொகை முழுவதையும் உடனடியாக செலுத்தப்பட்ட பின்னரே ஆணையரின் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கப்படும்.

16. மேற்குறித்த ஏலம்/ டெண்டரை காரணம் காட்டாது, திருக்கோயில் நிர்வாகத்தின் நன்மைக்கேற்ப ஏலம் நடைபெறும் நிலை உள்ளிட்ட எந்த நேரங்களிலும் – நிறுத்திவைக்கவோ ரத்து செய்யவோ, மாற்றி வைக்கவோ அல்லது நிராகரிக்கவோ இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

17. நிர்வாக நலன் கருதி, ஏல நிபந்தனைகளை எந்த நிலையிலும் மாற்றியமைக்கவோ, ரத்து செய்யவோ அல்லது புதிதாக சேர்க்கவோ, இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

18. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொண்டவர்கள், நியாயமான தொகைக்கு ஏலம்/ டெண்டர் கேள்வி கேட்கவில்லை என்று திருக்கோயில் நிர்வாகம் கருதினால், பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

19. பொது ஏலம்/ டெண்டர் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளின் படியானது. இந்த விதிகளின்படி பொது ஏலம்/ டெண்டரை முடிவு செய்வது அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து அங்கீகார அதிகாரத்திற்குட்பட்டது ஆகும்.

    இத்துறை ஆணையரால் உயர்ந்த ஏலம்/ டெண்டர் தொகை ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பின்னரே திருக்கோயிலிலிருந்து உரிமம் உறுதிசெய்யப்பட்டு உத்தரவு வழங்கப்படும்.

    ஏலம்/ டெண்டர் ஆணையரால் அங்கீகரிக்கப்படாமல் ரத்தாணையை பிரயோகித்து ரத்து செய்யப்படும் நிலையில், செலுத்திய டெபாசிட் தொகை பின்னர் திருப்பி வழங்கப்படும். இதற்கு எவ்வித வட்டியும் இழப்பு தொகையும் வழங்கப்பட மாட்டாது.

20. பொது ஏலம் / டெண்டர் இரண்டிலும் உறுதியாகாதவர்களின் டெபாசிட் தொகைக்கான அசல் வங்கி வரைவோலைகளை, ஏலப்பதிவேட்டில் ஏல நடவடிக்கைகளில் பதிவு செய்யப்பட்டு உரிய அலுவலர்கள் அங்கீகரித்த நிலையில் உரியவர்களிடம் திரும்ப வழங்கப்படும்.

21. பொது ஏலம் / டெண்டர் முடிவடைந்தவுடன் உடனடியாக உயர்ந்தபட்ச கேள்விதாரர் உரிமத் தொகையை அன்றே செலுத்தத் தவறினால், டெபாசிட் தொகை முழுமையாக பறிமுதல் செய்யப்படும். மேலும், டெண்டர் மற்றும் ஏலம் ரத்து செய்யப்பட்டு மறு டெண்டர் / மறு ஏலம் விடப்படும். மேலும் மறு ஏலம்/ டெண்டர் நடத்துவதால் ஏற்படும் விளம்பர செலவுகள் உட்பட அனைத்து செலவுகளையும் டெபாசிட் பறிமுதல் செய்யப்பட்ட நபரே ஏற்க வேண்டும். மேலும் மறு டெண்டர் ஏலத்தில் ஏலத் தொகை குறைவு ஏற்பட்டால் முன்

ஏலதாரர்/ டெண்டர்தாரர் அதனை ஈடு செய்ய வேண்டும். மறு ஏலம்/ டெண்டர் கூடுதல் தொகைக்கு சென்றால் முந்தைய ஏலம்/ டெண்டர்தாரருக்கு இதில் எவ்வித உரிமையும் இல்லை.

22. ஏலம்/ டெண்டர் தொகை ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டவுடன், ரூ.100/—க்கான அரசு முத்திரைத்தாளில், திருக்கோயில் வாசகப்படி, உரிம நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு ஏலம்/ டெண்டர்தாரர் திருக்கோயிலுக்கு முச்சலிக்கா பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

23. முச்சலிக்கா பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட பின்னரே, ஏலம்/ டெண்டரை ஏற்று உறுதி செய்து, உரிமத்தில் பிரவேசிக்க அனுமதித்து, திருக்கோயிலிலிருந்து தனியே அனுமதி உத்திரவு பிறப்பிக்கப்படும்.

24. உரிமதாரர்கள் திருக்கோயிலின் புனிதம், தூய்மை மற்றும் நலனிற்கு எதிராகவும், சேவார்த்திகள் நலனுக்கு இடையூறாகவும் செயல்படக்கூடாது.

25. உரிமதாரர்களுக்கும், (உரிமதாரரின் பணியாளருக்கும்) சேவார்த்திகளுக்கும் இடையே சச்சரவுகள் ஏதேனும் ஏற்படும் நிலையில் இது குறித்து இணை ஆணையர்/ செயல் அலுவலரால் பிறப்பிக்கப்படும் உத்தரவு / நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

26. உரிமதாரருக்கு ராஜீகம், தெய்வீகம், இயற்கை சீற்றம், பேரிடர் மற்றும் வேறு எவ்வித காரணங்களினாலும், இழப்புகளோ, பாதிப்புகளோ ஏற்படும் நிலையில், இதற்கு திருக்கோயில் நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. எனவே, உரிம கட்டணத் தொகையில் எந்த ஒரு சிறு பகுதியும் எந்த சூழ்நிலையிலும் கண்டிப்பாக திருப்பி வழங்கப்படமாட்டாது.

27. இந்த உரிம இனங்களை திருக்கோயில் ஏலம்/டெண்டர் விடுவதன் மூலம் / உரிமத்தை உரிமதாரர் அனுபவிப்பதன் மூலம், எழக்கூடிய எந்தவொரு அரசுக்கு செலுத்த வேண்டிய வருமானவரி, GST ( SGST, CGST ) வரி உள்ளிட்ட வேறு அனைத்து சட்டபூர்வமான வரிகள் மற்றும் அரசு கட்டணங்களை உரிமதாரர் தன்சொந்த பொறுப்பிலேயே அரசுக்கு உரிய காலக்கெடுவிற்குள் முழுயைhக தவறாமல் செலுத்தி விட வேண்டும். இத்தொகைகளுக்கு திருக்கோயில் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

28. GST உள்ளிட்ட எந்தவொரு அரசு வரியும் இந்த உரிம இனத்திற்கு புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டாலோ அல்லது வரி உயர்வு செய்யப்பட்டாலோ அதனை உரிமதாரரே தன் சொந்த பொறுப்பில் தீர்வு செய்ய வேண்டும்.

29. அரசு வரிவிகிதங்களில் மாற்றம் ஏற்படும் நிலையில் உயர்த்தப்பட்ட வரித் தொகையையும் உரிமதாரரே முழுமையாக செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். இத்திருத்தப்பட்ட வரித் தொகைகளுக்கும் திருக்கோயில் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

30. உரிம காலம் முடிவுற்ற பின்னர், இந்த உரிமத்திற்காக அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வருமான வரி, GST உள்ளிட்ட யாதொரு வரியும் நிலுவை இல்லை என சம்மந்தப்பட்ட துறைகளின் தடையின்மை சான்றினை பெற்று திருக்கோயிலில் சமர்ப்பிக்க வேண்டும். தணிக்கை அறிக்கை வரப்பெற்ற பின்னர் தணிக்கை அறிக்கையினை பரிசீலித்தும், GST உள்ளிட்ட யாதொரு வரியும் நிலுவை இல்லை என சம்மந்தப்பட்ட துறைகளின் தடையின்மை சான்றினை பரிசீலித்தும் உரிமதாரர் செலுத்தியுள்ள டெபாசிட் தொகை ரூ. 5,00,000 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) இறுதியாக திருப்பி வழங்கப்படும்

31. உரிமத்தை எக்காரணம் கொண்டும் வேறு எவருக்கும் எவ்விதத்திலும் மாற்றம் செய்யவும் தன்னிச்சையாக உரிமத்திலிருந்து விடுபடவும், அனுமதியில்லை.
32. திருக்கோயில் நிர்வாகம் நிர்ணயிக்கும் என்ற அளவு இடத்தில் மட்டுமே ஏலதாரர் படம் ஸ்டால் விற்பனை செய்ய வேண்டும். விசேஷ காலங்களில் மேற்கண்ட இடம் மாறுதலுக்கு உட்பட்டது. இடத்தின் விஸ்தீரணத்தை எக்காரணத்தை முன்னிட்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.
33. உரிமதாரர்கள் ஸ்டால் அமைத்து படங்கள் விற்பனை செய்து கொள்ளும் இடத்தில் தீ விபத்து மற்றும் இதர இயற்கை பாதிப்புகளிலிருந்து விடுபட தமது சொந்த பொறுப்பில் இன்சூரன்ஸ் மற்றும் மூன்றாம் நபர் காப்பீடு ( Third Party Insurance ) செய்திருக்க வேண்டும். அப்படி இன்சூரன்ஸ் செய்யாத பட்சத்தில் திருக்கோயிலிலிருந்து யாதோரு நஷ்ட ஈடு கோர கூடாது. மேலும் தேவையான தீ தடுப்பு சாதனங்களை தமது சொந்த பொறுப்பில் வாங்கி வைக்க வேண்டும்.
34. உரிமதாரர் / உரிமதாரரது பணியாளரின் நடவடிக்கைகளால் சேவார்த்திகள் நலன், திருக்கோயில் நலன் மற்றும் சொத்துகளுக்கு குந்தகம் விளையுமானால் திருக்கோயில் நிர்வாகம் நிர்ணயிக்கும் இழப்பீட்டுத் தொகையை உடன் உரிமதாரர் தம் சொந்தப் பொறுப்பில் செலுத்த வேண்டும்.
35. திருக்கோயில் நலன் கருதி ஸ்டால் அமைத்து படங்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம் பெற்றவர்கள், ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை பக்தர்கள் நலன் கருதியும், திருவிழா மற்றும் கட்டிட புனரமைப்பு காரணத்திற்காகவும், வேறு ஒரு இடத்திற்கு மாற்ற ஆலய நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோஅல்லது வேறு யாருக்கும் உரிமை கிடையாது.
36. திருக்கோயில் அபிவிருத்தியை கருதி கட்டிடங்கள் மாறுதல், அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால், கட்டிடத்தை திரும்ப எடுத்துக் கொள்ள திருக்கோயிலுக்கு அதிகாரம் உண்டு. இதில் உரிமதாரர் ஏதும் நஷ்ட ஈடு கோர உரிமை இல்லை.
37. உரிமதாரர் ஒதுக்கீடு செய்யப்பட்ட திருக்கோயில் கட்டிடத்தில் திருக்கோயில் அனுமதியின்றி எவ்வித மாற்றங்களும் அல்லது மராமத்து வேலைகளும் செய்ய கூடாது.
38. திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் ஒதுக்கி தரப்படும் இடத்தில் மட்டுமே சொந்த செலவில் ஸ்டால் அமைத்து படம் இனங்களை விற்பனை செய்து கொள்ள வேண்டும். விற்பனையாளரை தவிர அதிகப்படி நபர்களை ஸ்டாலில் அனுமதிக்கக் கூடாது.
39. கீழ் காணும் இனங்களை மட்டுமே ஸ்டாலில் விற்பனை செய்ய வேண்டும்.
    அ) **படம் இனங்கள்** : திருக்கோயிலில் காப்பிரைட் செய்யப்பட்ட அம்பாள் பட கிளாசி இனங்கள், போட்டோக்கள், லேமினேஷன் மவுண்ட் போட்டோக்கள், பாக்கெட் லேமினேசன் போட்டோக்கள், ஸ்டிக்கர் படங்கள், கீ செயின், டாலர், அம்மன் படம் பொறித்த பிளக்குடன் கூடிய லைட் முதலிய படம் இனங்கள்.
    ஆ) **பக்தி நூல்கள்** : இந்துமதத்தை சேர்ந்த ஆன்மீக பக்தி நூல்கள், புராணங்கள் மற்றும் இதிகாச நூல்கள்.
    இ) **குறுந்தகடுகள்:** பக்தி ஆன்மீக சொற்பொழிவுகள், உரைகள் மற்றும் இசைகளுக்கான ஒலி, ஒளி கேசட்டுகள் மற்றும் குறுந்தகடுகள்.

இத்திருக்கோயிலின் ஆகம பூஜை, பழக்க வழக்க நெறிகள் ஆன்மீகம் மற்றும் சமயக் கருத்துகளுக்கு எதிரான படங்கள், நூல்கள், கேசட்டுகள் எதுவும் விற்பனை செய்யக்கூடாது.

40. அதே போன்று ஆன்மீகம் சமயம் சம்பந்தப்படாத இதர வகையான படங்களையோ, நூல்களையோ, கேசட்டுகளையோ கண்டிப்பாக விற்பனை செய்ய அனுமதியில்லை.
41. விற்பனை செய்யப்படும் படம், நூல் கேசட்டுகள் முதலானவற்றில் தலா ஒன்றினை அலுவலகத்தில் மாதிரிக்காக முன்கூட்டியே சமர்ப்பித்து திருக்கோயில் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்படும் விலையின் அடிப்படையிலேயே சேவார்த்திகளுக்கு விற்பனை செய்ய வேண்டும்
42. ஒதுக்கீடு செய்யப்படாத இடத்திலோ கூடுதலான இடத்தை ஆக்கிரமத்தோ மேற்படி இனங்களை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.
43. திருக்கோயில் நிர்வாகத்தால் அனுமதிக்கப்படாத மற்றும் விலை நிர்ணயம் செய்யப்படாத இனங்களை விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், டெபாசிட் தொகையும் பறிமுதல் செய்யப்படும். விற்பனை இனங்களுக்கு திருக்கோயிலால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிகமான தொகை வசூல் செய்யக்கூடாது.
44. படம் விற்பனைக் கூடத்திற்கான மின் கட்டணத்திற்கு தனி மின் இணைப்பு சொந்த செலவில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கேட்பிற்கேற்ப உரிமதாரர் திருக்கோயில் பெயரில் உரிய மின் கட்டணம் செலுத்த வேண்டும்.
45. இத்திருக்கோயிலுக்கு வருகை புரியும், முக்கிய பிரமுகர்களுக்கு திருக்கோயில் நிர்வாகம் கோரும் படம் இனங்களை இலவசமாக வழங்க வேண்டும்.
46. இத்திருக்கோயில் மற்றும் அறநிலையத்துறையால் வெளியிடப்படும் திருக்கோயில் திங்கள் இதழ்கள், ஸ்தலவரலாறு புத்தகங்கள் மற்றும் இதரபக்தி நூல்களை விற்றுக்கொடுக்க வேண்டும். இதற்கு உரிய அனுமதிக்கப்பட்ட கமிஷன் தொகை மட்டும் வழங்கப்படும்.
47. படக்கவுண்டரையும், படக்கவுண்டரை சுற்றியுள்ள பகுதியையும், தன் சொந்த பொறுப்பில் தூய்மையாக பராமரிக்க வேண்டும்
48. படக்கவுண்டரின் முன்புறம் விற்பனை செய்யப்படும் இனங்களுக்கு விலை விபரப்பட்டியல் பெரிய எழுத்தில் பெயின்டினால் எழுதி வைக்க வேண்டும்.
49. 30.06.2023–ம் தேதி பிற்பகலில் உரிமக் காலம் முடிவுற்றவுடன் இதன் முழு உரிமைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி, தன்னிச்சையாக திருக்கோயிலை வந்து சேர்ந்துவிடும். உரிமக்காலம் முடிந்தவுடன் உரிமம் குறித்து எவ்வித உரிமையும் பின்தொடர்ச்சியும் – ஏலம்/ டெண்டர் எடுத்த நபருக்கு கிடையாது.
50. மேற்காணும் நிபந்தனைகளில் எதையேனும் மீறினாலோ, நிர்வாகம் மற்றும் பக்தர்கள் நலன் கருதி அவ்வப்போது திருக்கோயில் பிறப்பிக்கும் உத்தரவுகளை மறுதலிக்கும் நிலைகளிலோ எவ்வித அறிவிப்பும் இன்றி, இந்த உரிமத்தினை உடனடியாக ரத்து செய்து, மறு ஏலம்/ மறு டெண்டர் விடவும், உரிமத்தொகையினை பறிமுதல் செய்யவும், சட்டப்படி இதர குற்றவியல் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

51. கொரோனா தடுப்பு குறித்து அரசு அவ்வப்போது அறிவிக்கும் உத்தரவுகளை முழுமையாக கடைபிடித்து உரிமத்தை அனுபவித்துக்கொள்ள வேண்டும்.

52. தற்போதைய சூழ்நிலையில் ( கோவிட் – 19 ) கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் காரணமாக ஏலம் / டெண்டர் திறப்பில் கலந்து கொள்பவர்கள் உடல் வெப்பநிலை பரிசோதனைக்கு உட்படுத்தியும், முகக்கவசம் அணிந்தும் கலந்து கொள்ளுமாறும், அரசால் அறிவிக்கப்படும் விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றியும் ஏலம் / டெண்டர் திறப்பில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதர நிபந்தனைகள் ஏதும் இருப்பின் பின்னர் அறிவிக்கப்படும்.

https://samayapurammariamman.hrce.tn.gov.in, http://tenders.tn.gov.in என்ற திருக்கோயிலின் இணையதளத்தில் இது தொடர்பான தொடர் நடவடிக்கைகளை அறிந்து கொள்ளலாம். மேலும், டெண்டர் நிபந்தனைகள் மற்றும் டெண்டர் படிவத்தை பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

சி. கல்யாணி, எம்.எல்.,

இணை ஆணையர்/ செயல் அலுவலர்/தக்கார்